# இளையர்நீதிமன்றத்தின் கீழ் வரும்

# குடும்ப வழிகாட்டி உத்தரவு(FGO)

முக்கியத்தகவல்கள்



# பொருளடக்கம்


**01** முன்னுரை

**02** FGO(குடும்பவழிகாட்டிஉத்தரவு)என்றால்என்ன?

**03** FGOவிண்ணப்பம்செய்வதற்குமுன்,நீங்கள்தெரிந்து கொள்ளவேண்டிய தகவல்கள்.

**03** இளையர்நீதிமன்றம்,FGO-வைஎப்போதுவழங்கும்?

**04** FGO- வுக்கு விண்ணப்பம் செய்வது எப்படி?

**05** நீதிமன்றத்தில் என்ன நடக்கும்?

**06** உங்கள்பிள்ளைFGO-வைப்பின்பற்றவில்லைஎன்றால் என்ன நடக்கும்?

**07** உங்கள்பிள்ளைக்குநீங்கள்எவ்வாறுஉதவலாம்?

**08** பயனுள்ள தகவல்



பொறுப்புத் துறப்பு

- இந்த வெளியீடு, FGO பற்றிய தகவல்களை உள்ளடக்குகிறது. இது பொதுத் தகவல் அளிப்பதற்கு மட்டுமே. சட்ட ஆலோசனைக்குப் பதிலாக இதைக் கருதக்கூடாது.
- உங்களுக்கு ஏதேனும் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் தயவுசெய்து ஒரு வழக்கறிஞரை அணுகவும்.
- இந்த வெளியீட்டின் பொருள் அடக்கங்களின் தொடர்பில் எழும் அனைத்து பொறுப்புகளையும் வெளியிட்டாளர்கள் நிராகரிக்கின்றனர்.
- www. judiciary.gov.sg/family/family-guidance-children-young-persons வலைத்தளம் அல்லது விரைவு குறியீட்டுப் பயன்பாட்டு (QR code) வழி மேலும் தகவல் பெறலாம்.




# முன்னுரை

சிறுவரின் அல்லது (16 வயதிற்கு உட்பட்ட)இளையரின்பெற்றோருக்கோ பாதுகாவலர்களுக்கோ, தங்கள்பிள்ளைகளுக்குவழிகாட்டுவதற்கு உதவித் தேவைப்படும்போது, அவர்கள்**FGO-**வுக்குவிண்ணப்பிக்கலாம்.

**FGO-** வுக்கு விண்ணப்பிக்க நீங்கள் ஆலோசித்தால், இந்தக் கையேடு தேவையானப் படிநிலைகள் மூலம் உங்களுக்கு வழிகாட்டும்.

# FGO (குடும்ப வழிகாட்டி உத்தரவு) என்றால் என்ன?

FGO–என்பது ஒரு நீதிமன்ற உத்தரவு. சிறுவரின் அல்லது இளம் வயதினரின் பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் தங்களுடைய பிள்ளைகளுக்கு வழிகாட்ட உதவி தேவைப்படும் போது இதற்கு விண்ணப்பிக்கலாம். சிறுவர் அல்லது இளம் நபரின் நடத்தை மீது மட்டுமே கவனத்தை மையமாக செலுத்தியதிலிருந்து மாறி, குடும்பம் ஆற்றும் பங்களிப்பு மீதும் கவனம் செலுத்தப்படுவதினால் இந்த மாற்றத்தை பிரதிபலிப்பதற்காக, முன்பு இருந்த பெற்றோர் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள உத்தரவுக்குப் (BPC) பதிலாக, இப்போது FGO உள்ளது.

சிறுவர் மற்றும் இளம் வயதினர் சட்டத்தின் (CYPA) கீழ் வரும் வழக்குகளைக் கையாளும் இளையர் நீதிமன்றத்தில், FGO விண்ணப்பம் விசாரிக்கப்படும்.



## FGO விண்ணப்பம் செய்வதற்கு முன் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள்.



பெற்றோரும் பாதுகாவலர்களும், FGO வுக்கு விண்ணப்பம் செய்வதை ஒரு கடைசிக்கட்ட முயற்சியாகவே கருத வேண்டும். ஒரு விண்ணப்பம் செய்வதற்கு முன், பெற்றோரும் பாதுகாவலர்களும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அ
உங்கள் பிள்ளையின் நடத்தை எவ்வாறு இருக்கிறது என்பதையும், தேவைப்படும் ஆதரவு என்ன என்பதையும் கண்டறிய, நீங்கள் ஆசிரியர்கள், பள்ளி முதல்வர் அல்லது பிற பள்ளி அதிகாரிகளுடன் பேசி அறிந்துகொள்ளுங்கள்.

ஆ
பள்ளிகள், குடும்பச் சேவை நிலையங்கள் அல்லது ஏனைய சமூகச் சேவை முகவர் நிலையங்கள் ஆகிய இடங்களில், நீங்களும் மற்றும்/அல்லது உங்கள் பிள்ளையும் நிபுணத்துவ ஆலோசனையை நாடவும்.

இ
தேவைப்பட்டால், நீங்களும் மற்றும்/அல்லது உங்கள் பிள்ளையும், உளவியல் அல்லது மனநல ஆலோசனையை நாடவும்.

## இளையர் நீதிமன்றம், FGO-வை எப்போது வழங்கும்?



பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டுமே இளையர் நீதிமன்றம் FGO-வை வழங்கும்.

அ
நீங்கள் உங்கள் பிள்ளைக்கு வழிகாட்ட இயலவில்லை; உங்கள் பிள்ளை வேறொருவரால் வழிகாட்டப்பட வேண்டும்.

ஆ
நீங்களும் உங்கள் பிள்ளையும், ஒரு குடும்பத்திட்டத்தை நிறைவுசெய்துள்ளீர் (நீதிமன்றம் இந்த நிபந்தனையைத் தளர்த்தி இருந்தாலொழிய).

இ
நீங்கள் உத்தரவின் விளைவுகளைப் புரிந்துகொண்டு உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்குச் சம்மதிக்கிறீர்கள்.

இளையர் நீதிமன்றத்தில் FGO-வுக்கு விண்ணப்பம் செய்த பிறகு அந்த விண்ணப்பத்தை திரும்பப்பெறுவதற்கு நீதிமன்ற ஒப்புதல் பெற வேண்டும் என்பதை பெற்றோரும்/பாதுகாவலர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# ஒரு FGO-வுக்கு விண்ணப்பம் செய்வது எப்படி?

## படி 1

உங்கள் விண்ணப்பத்தை https://go.gov.sg/pre-fgo-registration என்ற இணையதளம் வழியாக ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்பிறகு, உங்கள் விண்ணப்பம் பின்வரும் நியமிக்கப்பட்ட சமூக சேவை நிறுவனங்களில் (SSA) ஏதேனும் ஒன்றுக்கு அனுப்பப்படும்:

- சிங்கப்பூர் குழந்தைகள் சங்கம்
- எப்வொர்த் சமூக சேவைகள்

நியமிக்கப்பட்ட சமூக சேவை நிறுவனம் (SSA), உங்களின் FGO-க்கு முந்தைய தகுதிச் சரிபார்ப்பு நேர்காணலுக்கான சந்திப்பை ஏற்பாடு

சரிபார்ப்பதற்காக இந்த ஆவணங்களைக் கொண்டு வரவும்:

- உங்கள் அடையாள அட்டைகள்
- உங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை
- பராமரிப்பு மற்றும் பேணுதல் தொடர்பான நீதிமன்ற உத்தரவுகள், பாதுகாவலர் அல்லது தத்தெடுப்பு தொடர்பான நீதிமன்ற உத்தரவுகள்
- போலீஸ் அறிக்கைகள், ஏதாவது இருந்தால்



## படி 2

முகவர் நிலையத்தில் உங்களையும் உங்கள் பிள்ளையையும் (உங்களுடன் வந்திருந்தால்) ஒரு தகுதிநிலைச் சோதனைப் புரியும் பணியாளர் நேர்காணல் நடத்துவார்.

- நீங்கள் இனி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து தகுதிநிலைச் சோதனைப் புரியும் பணியாளர் (screening worker) உங்களுக்கு ஆலோசனை வழங்குவார் மேலும் உங்களையும் உங்கள் பிள்ளையையும் பொருத்தமான ஒரு குடும்பத் திட்டத்திற்கு (family programme) அனுப்பலாம்.
- அத்திட்டத்தின் பலனின் அடிப்படையில் FGO வுக்கு விண்ணப்பம் செய்வதையும் நீதிமன்றம் செல்வதையும் நீங்கள் முடிவு செய்யலாம்.
- உங்கள் பிள்ளை செவிமடுக்க மறுக்கும் நிலையில் இருந்தாலோ அல்லது குடும்பத் திட்டத்தில் பங்கேற்க மறுத்தாலோ, நீங்கள் நீதிமன்றத்தில் FGO வுக்கான விண்ணப்பம் செய்வதற்கான தேதியைப் பெற தகுதிநிலைச் சோதனைப் புரியும் பணியாளர் இளையர் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்வார்.





# நீதிமன்றத்தில் என்ன நடக்கும்?



FGO விண்ணப்பம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போது இளையர் நீதிமன்ற நீதிபதி உங்களை மற்றும்/அல்லது உங்கள் பிள்ளையை ஒரு குடும்பத் திட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அல்லது அத்திட்டத்தை நிறைவு செய்யுமாறும் கட்டளையிடலாம்.

ஒரு பொருத்தமான FGO-வை முடிவு செய்வதற்கு முன், உங்கள் பிள்ளை பற்றிய ஒரு சமூக அறிக்கை (social report) தயார் செய்யப்பட வேண்டும் என்றும் நீதிபதி கேட்டுக்கொள்ளலாம். அறிக்கை தயாராகும் வரை உங்கள் பிள்ளையை ஒரு பொருத்தமான நபருடன் அல்லது பாதுகாப்பான இடத்தில் தங்குமாறும் நீதிபதி உத்தரவிடலாம்.




உங்கள் பிள்ளை நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால், உங்கள் பிள்ளைக்கு ஒரு கைது ஆணை பிறப்பிக்கப்படலாம்.

இளையர் நீதிமன்ற நீதிபதி சமூக அறிக்கையின் உள்ளடக்கங்களை ஆராய்வார் மற்ற இரு குழு ஆலோசகர்களுடனும் அந்த வழக்கு பற்றி விவாதிப்பார் (குழு ஆலோசகர்கள் எனப்படுபவர்கள் குழந்தைகள் மற்றும் இளையர்களுடன் பரந்த வேலை அனுபவம் கொண்ட சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்கள் ஆவர் மற்றும் இவர்கள் சிங்கப்பூர் அதிபரால் நியமிக்கப்பட்டவர்கள்). இளையர் நீதிமன்ற நீதிபதி நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று திருப்தியடைந்தால், உங்கள் பிள்ளை:




- மூன்று ஆண்டுகள் வரை ஒரு பாதுகாப்பு இடத்தில் வைக்கப்படலாம்.
- மூன்று ஆண்டுகள் வரை ஒரு தகுதிபெற்ற நபரின் பராமரிப்பின் கீழ் அமர்த்தப்படுவார்.
- மூன்று வருடங்கள் வரை, சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட சமூக நல அலுவலர் (approved welfare officer) மேற்பார்வையின் கீழ் அமர்த்தப்படுவார்.
- ஆலோசனை, (counselling) மனநலச் சிகிச்சை பயற்சிகள் (psychotherapy), அல்லது வேறு ஏதேனும் மதிப்பீடு திட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ள உத்தரவிடப்படலாம். உங்கள் பிள்ளையுடன் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் கலந்துகொள்ள நீங்களும் உத்தரவிடப்படலாம்.

# உங்கள் பிள்ளை FGO-வைப் பின்பற்றவில்லை என்றால் என்ன நடக்கும்?

FGO வில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை உங்கள் பிள்ளை பின்பற்றவில்லை என்றால், உங்கள் பிள்ளையின் வழக்கிற்குப் பொறுப்பான சமூகநல அதிகாரி (welfare officer), இளையர் நீதிமன்றத்தில் உங்கள் பிள்ளைக்கு எதிராக மீறல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

உங்கள் பிள்ளை பின்னர் சிங்கப்பூர் சிறுவர் இல்லத்தில் அல்லது சிங்கப்பூர் பெண்கள் இல்லத்தில் காவலில் (remand) வைக்கப்படலாம். அதே நேரத்தில் அவர்கள் மேல் மேலும் ஓர் அறிக்கை தயார் செய்யப்படும். இளையர் நீதிமன்ற நீதிபதி, பிள்ளைக்கு மேலும் தேவையான உத்தரவுகளைத் தீர்மானிப்பதற்கு முன்னர் அந்த அறிக்கையைப் பரிசீலிப்பார்.



# நீங்கள் உங்கள் பிள்ளைக்கு எப்படி உதவலாம்

ஒரு FGO-வுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் மன உளைச்சலை ஏற்படுத்தக்கூடிய அனுபவமாக இருக்கலாம். உங்கள் உறவு பாதிக்கப்படலாம். மேலும் இந்தக் காலகட்டத்தில் உங்கள் பிள்ளையை வழிநடத்த நீங்கள் நடவடிக்கை எடுப்பது முக்கியம்:



உங்கள் பிள்ளை FGO-இல் கூறப்பட்டுள்ள கட்டளைகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்தவும் - அவர்களின் முன்னேற்றம் இதைச் சார்ந்துள்ளது.



உங்கள் பிள்ளையின் வழக்கு தொடர்பாக பொறுப்பு ஏற்கும் அதிகாரியுடன் ஒத்துழைக்கவும் உங்கள் பிள்ளைக்கு உதவ அவர்களுக்கு உதவுங்கள்.



ஆலோசனை பெறச் செல்லுங்கள் - கடினமான பிரச்சினைகள் சமாளிப்பதற்கு ஒரு குடும்பமாக செயல்படுங்கள்.



பிள்ளை வளர்ப்புப் பயிலரங்குகளில் கலந்துகொள்ளுங்கள் உங்கள் பிள்ளையுடன் நீங்கள் பழகும் முறையை மேம்படுத்துங்கள்.



உங்கள் பிள்ளையின் தேவைகளை உணர்ந்து கொள்ளுங்கள் - உங்கள் பிள்ளையின் கவலைகளை நீங்கள் வெளிப்படையான திறந்த மனப்போக்குடன் கேளுங்கள்.

# பயனுள்ள தகவல்கள்

ஒரு FGO தகுதிநிலைச் சோதனைச் செய்யும் சந்திப்புத் தேதிக்கு:

சிங்கப்பூர் சிறுவர் சங்கம்
**(Singapore Children Society)**
தொடர்பு எண்: 6253 1124
மின்னஞ்சல்: pcs@childrensociety.org.sg
வலைத்தளம்: www.childrensociety.org.sg

எப்வொர்த் (Epworth) சமூக சேவைகள்
தொடர்பு எண்: 6715 3732
மின்னஞ்சல்: fgoscreening@epworth.sg
வலைத்தளம்: www.epworth.sg

குடும்ப சேவை மையங்கள் (FSC)
https://www.msf.gov.sg/dfcs/familyservice/default.aspx

சமூக சேவை முகவர் நிலையங்கள் (SSA)
https://www.ncss.gov.sg/navigator

சட்ட ஆலோசனை
உங்களுக்குச் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் நீங்கள் பின்வருவனவற்றை அணுகலாம்:
- சட்ட உதவி இலாக்கா
- சமூக நீதி மையம் அல்லது அரசு நீதிமன்றங்களில் உள்ள சமூக சட்ட கிளினிக்குகள்.



# குறிச்சொற்களுக்கான விளக்கங்கள்

சிறுவர் மற்றும் இளம் வயதினர் சட்டம் (CYPA): குழந்தைகள் மற்றும் இளையர்களின் நலன், பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைப் பாதுகாக்கும் முக்கியச் சட்டம்.

விண்ணப்பத் தகுதிச் சோதனை புரியும் பணியாளர் **(screening worker)**: Singapore Children's Society அல்லது Epworth Community Services-இல் FGO வுக்கு விண்ணப்பத் தகுதி சோதனையின் செயல்முறை மூலம் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு வழிகாட்டுகின்ற ஒரு அதிகாரி.

சமூக அறிக்கை: பிள்ளையின் குடும்பப் பின்னணி, நடத்தை, பள்ளி பதிவுகள், மருத்துவ வரலாறு மற்றும் வளர்ச்சி நிலை போன்ற தகவல்களைக் கொண்ட அறிக்கை.

சமூக நல அதிகாரி: பிள்ளை பற்றிய விசாரணை, மதிப்பீடு மற்றும் மேற்பார்வையை மேற்கொள்ள சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சினால் (MSF) நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி.

FAMILY JUSTICE COURTS
SINGAPORE